



# அகர முதல

அகர முதல உரக்க சொல்வோம்

Aagaramuthalaa | மின்னிதழ் | www.Aagaramuthalaa.com


விளம்பர தொடர்புக்கு
9597887847 / 8870884969

புதன், நவம்பர் 10.2021 — மலர்:11 இதழ்:16

# தமிழ்நாட்டிற்கு ரெட் அலர்ட்... வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை!

# மழை முடியும் வரை அம்மா உணவகத்தில் இலவச உணவு

## மழை வெள்ளத்தால் பாதிப்பு: மக்களை நேரடியாக சந்தித்து நிவாரணப் பொருட்களை வழங்கிய முதல்வர்!





சென்னையில் கனமழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கடந்த 3 நாட்களாக முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அந்த வகையில் இன்று தனது சொந்த தொகுதியான கொளத்தூரில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை ஆய்வு செய்த முதலமைச்சர், பொதுமக்களிடம் குறைகளைக் கேட்டறிந்தார். தொடர்ந்து மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்காக உணவு தயார் செய்யப்படும் இடத்தில் முதலமைச்சர் ஆய்வு மேற்கொண்டார். அப்போது உணவு தரமாக இருக்கிறதா என சாப்பிட்டு பார்த்தார். மேலும், சென்னை போரூரில் உள்ள அம்மா உணவகத்தில் உணவை சாப்பிட்டுப் பார்த்து தரத்தை ஆய்வு செய்தார். இதனிடையே ஆழ்வார்பேட்டையில் செய்தியாளர்களிடம் பேசிய முதலமைச்சர், அதிமுக ஆட்சிகாலத்தில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தில் கொள்ளையடித்துள்ளனர். மழைநீர் வடிகால் பணிகளில் சொல்ல முடியாத அளவிற்கு கொள்ளையடித்துள்ளனர். பொய் சொல்வதற்கென்றே பிறந்தவர் எடப்பாடி பழனிசாமி× என்று குற்றம்சாட்டினார். மழை முடியும் வரை அம்மா உணவகத்தில் இலவச உணவு வழங்க உத்தரவிட்டுள்ளதாக தெரிவித்த முதலமைச்சர், மாநகராட்சி சார்பாகவும் உணவு சமைத்து வழங்கப்பட்டு வருகிறது என்றும் கூறினார்.

சென்னையில் அடுத்த 2 நாட்களுக்கு கன முதல் மிக கன மழை பெய்ய வாய்ப்புள்ளதாக பாலச்சந்திரன் தெரிவித்துள்ளார்.சென்னையில் கடந்த சில நாட்களாக தொடர் மழை பெய்து வருகிறது. இதனால் சாலைகளில் வெள்ளம் சூழ்ந்து பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. வரும் நாட்களிலும் கன மழை நீடிக்கும் என இந்திய வானிலை ஆய்வு மையம் ரெட் அலர்ட் எச்சரிக்கை விடுத்துள்ளது. இந்த நிலையில் சென்னை நுங்கம்பாக்கத்தில் செய்தியாளர்களிடம் பேசிய தென்மண்டல வானிலை ஆய்வு மைய தலைவர் பாலச்சந்திரன், தென்கிழக்கு வங்கக் கடலில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி காரணமாக சென்னையில் அடுத்த 2 நாட்களுக்கு கன முதல் மிக கன மழை பெய்ய வாய்ப்புள்ளதாக தெரிவித்துள்ளார். புயலாக மாறுமா என்பது தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறது. என்றும் கூறினார்.

## எந்தெந்த மாவட்டங்களுக்கு கனமழை எச்சரிக்கை?



தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ளது. கடந்த சில தினங்களாக சென்னை உள்பட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் கனமழை கொட்டி தீர்த்து வருகிறது. இந்த நிலையில், டெல்டா மாவட்டங்களில் அதி கனமழைக்கு வாய்ப்பு உள்ளதாகவும் சென்னையில் 3 நாட்களுக்கு கனழை தொடரும் எனவும் சென்னை வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. இதுகுறித்து வானிலை ஆய்வு மைய தென் மண்டல இயக்குநர் பாலச்சந்திரன் பேட்டி அளிக்கையில் கூறியதாவது:— தென்கிழக்கு வங்கக் கடல் மற்றும் அதனை ஒட்டிய பகுதியில் குறைந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி உருவாகியுள்ளது . இது அடுத்த 36 மணி நேரத்தில்காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று மேற்கு வடமேற்கு திசையில் நகர்ந்து 11 ஆம் தேதி காலை தமிழகக் கரையைக் நெருங்கக் கூடும்.இதன் காரணமாக இன்று டெல்டா மாவட்டங்கள் புதுக்கோட்டை ராமநாதபுரம் மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒரு சில இடங்களில் அதி கன மழை பெய்யக்கூடும். தூத்துக்குடி, நெல்லை கடலூர், மதுரை, சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் கன முதல் மிக கனமழையும் சென்னை திருவள்ளூர் காஞ்சிபுரம் செங்கல்பட்டு அரியலூர், பெரம்பலூர் திருச்சி விழுப்புரம் விருதுநகர் மற்றும் புதுச்சேரி ஆகிய பகுதிகளில் ஓரிரு இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய கன மழையும், ஏனைய மாவட்டங்களில் பெரும்பாலான இடங்களில் மிதமான மழையும் பெய்யக்கூடும். சென்னையைப் பொறுத்தவரை அடுத்த 3 நாட்களுக்கு மழை தொடரும் 24 மணி நேரத்திற்கு வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும் நகரின் ஒரு சில இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய கன மழை பெய்யக்கூடும். அடுத்த 48 மணி நேரத்திற்கு நகரின் ஒரு சில இடங்களில் கன முதல் மிக கன மழை பெய்யக்கூடும் அதிகபட்ச வெப்பநிலை 26 மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 24 டிகிரி செல்சியஸை ஒட்டி இருக்கும் என்று தெரிவித்துள்ளார். மேலும், சென்னை வானிலை ஆய்வு மையம் கூறுகையில் நாளை மறுதினம் வட கடலோர மாவட்டங்கள் மற்றும் சேலம், நீலகிரி, கோவை, நாமக்கல், ஈரோடு மாவட்டங்கள், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய கனமழையும், ஏனைய மாவட்டங்களில் பெரும்பாலான இடங்களில் லேசானது முதல் மிதமான மழையும் பெய்யக்கூடும். 13 ந்தேதி (சனிக்கிழமை) நீலகிரி, கோவை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கனமழையும், ஏனைய மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரியில் லேசானது முதல் மிதமான மழையும் பெய்ய வாய்ப்பு இருக்கிறது. தெற்கு ஆந்திரா மற்றும் தமிழக கடற்கரை பகுதிகள் மர்றும் அதனை ஒட்டிய இலங்கை கடற்கரை பகுதிகள், குமரிக்கடல் பகுதிகள் மற்றும் தெற்கு வங்கக்கடல் பகுதிகளில் நாளை வரை மணிக்கு 40 முதல் 70 கி.மீ.வேகத்தில் சூறாவளி காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் இந்த பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என்று எச்சரிக்கப்படுகின்றனர்.வடகிழக்கு பருவமழை காலமான கடந்த அக்டோபர் 1 ந்தேதி முதல் இன்று வரையில் பெய்ய வேண்டிய சராசரி மழை அளவு 24 செ.மீ ஆகும் ஆனால் தமிழகத்தில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக இயல்பை விட 46 சதவீதம் அதிகரித்து, 36 செ. மீ. என்ற அளவில் பதிவாகி இருக்கிறது. இதில் கிருஷ்ணகிரி, மதுரை, விருதுநகர் மாவட்டங்களை தவிர மற்ற இடங்களில் இயல்பை விட மழை அதிகம் பெய்துள்ளது குறிப்பிடத்தக்கது.



# தூர்வாரும் பணிகளை செய்யாத காரணத்தால் சென்னை பாதிப்பு
# எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி குற்றச்சாட்டு




வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கு முன்பாகவே தேவையான தூர்வாரும் பணிகளை செய்யாத காரணத்தால் மழை வெள்ளத்தில் சென்னை பாதிக்கப்பட்டிருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி குற்றஞ்சாட்டி உள்ளார். யானைகவுனி, திருவொற்றியூர், ஆர். கே. நகர், மூலக்கடை உள்ளிட்ட பகுதிகளில் மழை வெள்ள பாதிப்பை அவர் ஆய்வு செய்தார். அதன் பின்னர் கொளத்தூரில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மதிய உணவு மற்றும் நிவாரண பொருட்களை வழங்கிய பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மூன்று நாட்களாகியும் இன்னும் பல பகுதிகளில் தண்ணீர் வடியாமல் இருப்பதால் பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகியுள்ளதாக கூறினார்.

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துவருகிறது. அதனால் கடந்த நான்கு தினங்களாக தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் தொடர்ந்து மழை பெய்துவருகிறது. சென்னையில் பல இடங்களில் தண்ணீர் தேங்கியுள்ளதால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிப்படைந்துள்ளது. முதல்வர், அமைச்சர்கள் ஆகியோர் பாதிப்புக்குள்ளான பகுதிகளை நேரில் சென்று ஆய்வு செய்துவருகிறார்கள். அதேபோல், சென்னை வால்டாக்ஸ் சாலையில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களை சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி பார்வையிட்டு அப்பகுதி மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கினார்.

# வெள்ளத்திற்கு காரணம் திமுக ஆட்சியில் கட்டப்பட்ட பாலங்கள்தான்: சசிகலா




சென்னையில் கடந்த சில நாட்களில் பெய்த கன மழை காரணமாக பல இடங்கள் வெள்ளக்காடாக காட்சியளிக்கிறது. வெள்ளம் பாதித்த பகுதிகளை அமைச்சர்களும் அதிகாரிகளும் பார்வையிட்டு நிவாரண மற்றும் மீட்புப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். பாதிக்கப்பட்ட இடங்களை ஆய்வு செய்த எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி, திமுக அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்காததே சென்னையின் தற்போதைய நிலைக்கு காரணம் என்று குற்றம்சாட்டியிருந்தார். இந்த நிலையில் சென்னை வெள்ளம் தொடர்பாக அதிமுக பொதுச்செயலாளர் என்ற பெயரில் சசிகலா அறிக்கை வெளியிட்டுள்ளார். அதில், ஆட்சியாளர்கள் வெள்ள பாதிப்பு பகுதிகளை பார்வையிட செல்வதால், அதிகாரிகளால் பாதிப்புகளை சரிசெய்வதில் கவனம் செலுத்த முடிவதில்லை. ஆட்சியாளர்களுக்கு வரைபடம் காட்டி, விளக்கம் அளிப்பதிலேயே அதிகாரிகள் நேரத்தை செலவிடுகின்றனர் என குற்றம்சாட்டியுள்ளார். பாதிக்கப்பட்டுள்ள மக்களுடன், மீட்புப்பணியில் ஈடுபடுவோருக்கும் உரிய அடிப்படை வசதிகள் செய்து தரப்பட வேண்டும் என்ற அவர், பாதிக்கப்பட்டுள்ள விளைநிலங்கள், விவசாயிகளுக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார். அதிமுக தொண்டர்களும், உணவு, குடிநீர், பால் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களை மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கிட வேண்டும் எனவும் சசிகலா கோரிக்கை விடுத்துள்ளார். சென்னையின் வெள்ள பாதிப்புகளுக்கு மிக முக்கிய காரணம் திமுக ஆட்சிக்காலங்களில் எவ்வித வடிகால் வசதியும் இன்றி தொலைநோக்கு பார்வையில்லாமல் நகரத்தின் முக்கிய சாலைகளில் கட்டப்பட்ட பாலங்கள் தான் என்று மக்கள் கருதுவதாகவும் சசிகலா குற்றம்சாட்டியுள்ளார்.

# அத்தியாவசியமின்றி மக்கள் வெளியே செல்ல வேண்டாம்
# தமிழ்நாடு ஆளுநர் அறிவுறுத்தல்



வடகிழக்கு பருவமழை தொடங்கியுள்ளதையொட்டி, சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு, தஞ்சை, மயிலாடுதுறை, திருவாரூர், நாகை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது. குறிப்பாக, அடுத்த இரண்டு நாட்களுக்கு சென்னை உள்ளிட்ட மாவட்டங்களில் அதீத கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ள நிலையில், முன்னெச்சரிக்கை நடவடிக்கைளை தமிழ்நாடு அரசு முடுக்கிவிட்டுள்ளது. இந்த நிலையில், "மழை பாதிப்புள்ள பகுதிகளில் அத்தியாவசியமின்றி மக்கள் வெளியே செல்ல வேண்டாம். அத்தியாவசியமின்றி வெளியே செல்லாமல் இருப்பதன் மூலம் விரும்பத்தகாத நிகழ்வுகளைத் தவிர்க்கலாம் . இந்திய வானிலை ஆராய்ச்சி மையத்தின் கனமழை முன்னறிவிப்பைக் கருதி மக்கள் விழிப்புடனும், முன்னெச்சரிக்கையுடனும் இருக்க வேண்டும்" என்று தமிழ்நாடு ஆளுநர் ஆர். என். ரவி பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளார். தமிழ்நாடு ஆளுநர் மாளிகையின் அதிகாரப்பூர்வ ட்விட்டர் பக்கத்தில் தமிழ்நாடு ஆளுநர் ஆர். என். ரவியின் அறிவுறுத்தல் வெளியிடப்பட்டுள்ளது.

# பாதிப்புக்குள்ளான பகுதிகளைப் படகில் சென்று பார்வையிட்ட அண்ணாமலை!



வடக்கிழக்கு பருவ மழை காரணமாக தமிழ்நாடு முழுக்கப் பரவலாக மழை பெய்துவருகிறது. சென்னை உட்பட பல்வேறு இடங்களில் குடியிருப்பு பகுதிகளுக்குள் மழை நீர் புகுந்துள்ளதால், மக்கள் அவதிக்குள்ளாகியுள்ளனர். பல்வேறு கட்சி தலைவர்களும் மக்களை நேரில் சந்தித்து நிவாரண பொருட்களை வழங்கி உதவி வருகின்றனர். அதேபோல் தமிழ்நாடு பாஜக தலைவர் அண்ணாமலை கொளத்தூர் தொகுதி ஜவஹர் நகரில் படகில் சென்று மழை வெள்ளத்தால் பாதிப்படைந்த பகுதியை நேரில் சென்று பார்வையிட்டார்.

விளம்பர தொடர்புக்கு
9597887847

அகர முதல
உரக்க சொல்வோம்
Aagaramuthalaa
தொடர்புக்கு
9597887847
8870884969
aagaramuthala@gmail.com
டிஜிட்டல் பிரிண்டர்ஸ், பத்திரிக்கை, இலக்கிய பேரவை, கல்விக் குழு




# அகர முதல

Aagaramuthalaa மின்னிதழ் www.Aagaramuthalaa.com

விளம்பர தொடர்புக்கு
9597887847 / 8870884969



# கடலூர் மாவட்ட செய்திகள்

## மிக கனமழை எதிரொலி:கடலூரில் தயார் நிலையில் மீட்புப்படை

### சென்னை, கடலூர், ஸ்ரீஹரிகோட்டா வரை உள்ள பகுதிகளில் மிக கனமழை



கடலூர் மாவட்டத்தில் வடகிழக்கு பருவ மழை தீவிரம் அடைந்து வருகிறது. இதனால் மாவட்டத்தில் பல்வேறு இடங்களிலும் பரவலாக மழை பெய்து வருகிறது. இதற்கிடையில் வங்க கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி மேலும் வலுப்பெற்று வட தமிழக கடற்கரையை நோக்கி நகரும் என்று வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. இதையொட்டி கடலூர், விழுப்புரம் உள்ளிட்ட 5 மாவட்டங்களுக்கு ஆரஞ்சு எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. அதன்படி கடலூர் மாவட்டத்தில் கன மழை பெய்து வருகிறது. இந்த மழையால் குளம், குட்டைகள், ஏரிகள் நிரம்பி வருகின்றன. அனைத்து பாசன வாய்க்கால்களிலும் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. ஆறுகளிலும் தண்ணீர் அளவுக்கு அதிகமாக செல்கிறது. இருப்பினும் ஒரு சில இடங்களை தவிர பெரும்பாலான இடங்களில் தண்ணீர் தேங்கவில்லை. தொடர்ந்து மழை பெய்தால் தண்ணீர் தேங்கி பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். இருந்தாலும் பேரிடர் மீட்பு பணிகளில் மாவட்ட நிர்வாகம் தயார் நிலையில் இருக்கிறது. தீயணைப்பு வீரர்கள், போலீசார் மீட்பு உபகரணங்களுடன் தயார் நிலையில் உள்ளனர். மேலும் பேரிடர் மீட்பு பணிகளுக்காக சென்னை ஆவடியில் இருந்து தமிழ்நாடு இயற்கை பேரிடர் மீட்பு குழுவினர் இன்ஸ்பெக்டர் எட்வர்ட் ராஜ் தலைமையில் சப்—இன்ஸ்பெக்டர் உமாமகேஸ்வரி முன்னிலையில் 70 பேர் கொண்ட குழுவினர் மீட்பு உபகரணங்களுடன் நேற்று கடலூர் வந்தனர். அவர்கள் கடலூர் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு சக்தி கணேசனை சந்தித்து, தாங்கள் மேற்கொள்ள வேண்டிய மீட்பு பணிகள் குறித்து விவாதித்தனர். தொடர்ந்து அவர்கள் காவலர் பயிற்சி அலுவலகத்தில் தங்கினர். பின்னர் அவர்கள் மாலையில் பல்வேறு போலீஸ் நிலையங்களுக்கு மீட்பு பணிகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டனர்.

## கடலூர் மாவட்டத்தில் விடிய, விடிய கொட்டித் தீர்த்த கனமழை

### 10,000 ஏக்கருக்கும் அதிகமான நெற்பயிர்கள் நீரில் மூழ்கி சேதம்



தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்து இருக்கிறது. கடலூர் மாவட்டத்தை பொறுத்தமட்டில் பரவலாக மழை பெய்து வருவதால் மாவட்டத்தில் உள்ள ஏரி, குளம், குட்டைகள் நிரம்பி வருகின்றன. ஆறுகளிலும் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. கடலூரில் நேற்று முன்தினம் இரவு தொடங்கிய மழை விடிய, விடிய கொட்டியது. நேற்று அதிகாலையும் மழை ஓயவில்லை. மாலை வரை விடாமல் மழை பெய்தபடி இருந்தது. சில நேரங்களில் கன மழையாகவும், சில நேரங்களில் மிதமான மழையாகவும் பெய்தது. இந்த மழையால் தாழ்வான இடங்களில் மழைநீர் குளம்போல் தேங்கியது. சாலைகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. குறிப்பாக மஞ்சக்குப்பம் மைதானத்தில் உள்ள சாலை, நீதிபதிகள் குடியிருப்பு சாலை உள்ளிட்ட பல்வேறு இடங்களில் மழைநீர் தேங்கி நின்றது. மேலும் நெல், வாழை, கத்தரி, வெண்டை போன்ற பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ள வயல்களிலும் தண்ணீர் அதிகளவு தேங்கி நிற்கிறது. தொடர்ந்து மழை பெய்தால் பயிர்கள் அழுகும் நிலை ஏற்படும். இதேபோல் சிதம்பரம், புவனகிரி, பரங்கிப்பேட்டை, விருத்தாசலம், குறிஞ்சிப்பாடி, ஸ்ரீமுஷ்ணம், பண்ருட்டி, காட்டுமன்னார்கோவில், சேத்தியாத்தோப்பு, வேப்பூர், லால்பேட்டை என மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் பரவலாக இடைவிடாது மழை பெய்தது. இதனால் தாழ்வான இடங்களில் தண்ணீர் தேங்கி நின்றது. மேலும் குடியிருப்புகளை சுற்றி தண்ணீர் தேங்கி நின்றதால் பொதுமக்கள் வீட்டுக்குள்ளேயே முடங்கினர். ஏராளமான இடங்களில் பாசன வாய்க்கால்களை தூர்வாரி ஆக்கிரமிப்புகளை அகற்ற அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காத காரணத்தால் மழைநீர் விளை நிலங்களுக்குள் புகுந்துள்ளது. இதனால் மாவட்டத்தில் சுமார் 7 ஆயிரம் ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்ட நெற்பயிர்கள் தண்ணீரில் மூழ்கி சேதமடைந்து வருவதாக விவசாயிகள் குற்றம்சாட்டி வருகின்றனர். இதேபோல் கழிவுநீர் வாய்க்கால்களையும் அதிகாரிகள் சரியான முறையில் தூர்வாரவில்லை. இதனால் வீடுகளை சுற்றி மழைநீர் தேங்கி நிற்கிறது. சில இடங்களில் வீடுகளுக்குள்ளும் மழை நீர் புகுந்தது. இதனால் பொதுமக்கள் பெரும் அவதியடைந்து வருகின்றனர். பரவனாறு, கொள்ளிடம், வெள்ளாறு போன்ற பல்வேறு ஆறுகளிலும் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. கடலூர் அருகே காராமணிக்குப்பத்தில் நேற்று வாரச்சந்தை நடைபெற்றது. ஆனால் மழை காரணமாக காய்கறி வாங்க பொதுமக்கள் செல்லாததால் வாரச்சந்தை வெறிச்சோடி காணப்பட்டது. இதனால் வியாபாரம் பாதிக்கப்பட்டதாக வியாபாரிகள் தெரிவித்தனர். இதனால் மாவட்டத்தில் விடிய விடிய கொட்டித்தீர்த்த கனமழையால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாக பாதிக்கப்பட்டது. இந்நிலையில் கடலூரில் பெய்து வந்த விடாத மழையால் சாலைகளில் மக்கள் நடமாட்டம் இன்றி வெறிச்சோடி காணப்பட்டது. கடலூர் லாரன்ஸ் ரோடு, பாரதி சாலை, நேதாஜி சாலை ஆகிய சாலைகளில் ஆட்கள் நடமாட்டம் எப்போதும் இருக்கும். ஆனால் நேற்று விடாமல் பெய்த மழையால் ஆட்கள் நடமாட்டம் இல்லாமல் வெறிச்சோடி இருந்தது. ஒரு சில வாகனங்கள் மட்டும் அவ்வப்போது சென்று வந்ததை பார்க்க முடிந்தது. அந்த வாகனங்களும் முகப்பு விளக்கை ஒளிர விட்டபடி சென்றதை பார்க்க முடிந்தது. இந்த மழையால் சாலை யோர வியாபாரிகள் மிகவும் சிரமப்பட்டனர். இருப்பினும் மழை கோட்டு, குடை விற்பனைஅதிகமாக இருந்தது. சாலையோரங்களில் வைத்து குடை, மழை கோட்டுகளை வியாபாரிகள் வந்து விற்பனை செய்ததை பார்க்க முடிந்தது. கம்மாபுரம் அருகே தேவங்குடியில் இருந்து கீரமங்கலம் செல்லும் சாலையில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியதால் சாலையில் உடைப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் அங்கு பெரிய பள்ளம் ஏற்பட்டுள்ளதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. இதேபோல் பெண்ணாடம் அடுத்த சவுந்தரசோழபுரம் கிராமத்தையும், அரியலூர் மாவட்டம் கோட்டைக்காடு கிராமத்தையும் இணைக்கும் வகையில் வெள்ளாற்றில் அமைக்கப்பட்டுள்ள தரைப்பாலத்தை வெள்ளம் அடித்து சென்றது. இதனால் அங்கு போக்குவரத்து துண்டிக்கப்பட்டதால் இரு மாவட்டத்தை சேர்ந்த மக்கள் பெரும் அவதி அடைந்து வருகின்றனர். இது தவிர செம்பேரி கிராமத்தையும், அரியலூர் மாவட்டம் தெத்தேரி கிராமத்தையும் இணைக்கும் வகையில் அமைக்கப்பட்ட தரைப்பாலமும் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டுள்ளது. விருத்தாசலம் அடுத்த பெரம்பலூர் எடையூர் இடையே செல்லும் உப்பு ஓடையில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவதால் அங்கு அமைக்கப்பட்டிருந்த தரைப்பாலம் மூழ்கி போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது. மேலும் உச்சிமேடு ஓடையில் அமைக்கப்பட்டுள்ள தரைப்பாலமும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால் அங்கும் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளதால் பொதுமக்கள் பெரும் சிரமம் அடைந்து வருகின்றனர். இது தவிர அங்கு அமைக்கப்பட்டு வரும் உயர்மட்ட பாலம் அமைக்கும் பணிகளும் பாதிக்கப்பட்டுள்ளது.

## பிச்சாவரம் சுற்றுலா மையத்தில் படகு சவாரி நிறுத்தம்



சிதம்பரம் அருகே உள்ள பிச்சாவரத்தில் சுற்றுலா மையம் உள்ளது. இங்கு கடலூர் மாவட்டம் மட்டுமின்றி, சென்னை, விழுப்புரம், சேலம் உள்ளிட்ட வெளிமாவட்டங்களில் இருந்தும், கேரளா, கர்நாடகா போன்ற வெளி⊠மாநிலங்களில் இருந்தும் தினசரி ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்து உற்சாகமாக படகு சவாரி செய்வது வழக்கம். இந்த நிலையில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ளதையொட்டி மாவட்டத்தில் கடந்த ஒரு வாரத்திற்கும் மேலாக தொடர்ந்து பரவலாக மழை பெய்து வருகிறது. இதனால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே நேற்று முன்தினம் இரவு முதல் நேற்று இரவு வரை மாவட்டத்தில் இடைவிடாது மழை பெய்து கொண்டே இருந்தது. இதனால் பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டது. மேலும் பொதுமக்கள் வீட்டுக்குள்ளேயே முடங்கினர். இந்நிலையில் தொடர் மழையால் பிச்சாவரம் சுற்றுலா மைய வளாகத்தில் மழைநீர் குளம்போல் தேங்கியது. இதனால் நேற்று படகு சவாரி நிறுத்தப்பட்டது. மழை தொடர்ந்து நீடித்தால் இன்றும்(செவ்வாய்க்கிழமை) படகு சவாரி நிறுத்தப்படும் என அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அகர முதல
Aagaramuthalaa
தொடர்புக்கு
9597887847
8870884969
aagaramuthala@gmail.com
டிஜிட்டல் பிரிண்டர்ஸ், பத்திரிக்கை, இலக்கிய பேரவை, கல்விக் குழு

### சிதம்பரத்தில் தயார் நிலையில்

# தேசிய பேரிடர் மீட்புப் படையினர்



சிதம்பரம்: கனமழை மற்றும் புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சிதம்பரத்தில் தேசிய பேரிடர் மீட்புப் படையினர் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளர். வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு புதிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகியுள்ளது. இது புயலாக மாறி சென்னை— கடலூர் இடையே கரையை கடக்கும் என தமிழக வானிலை மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. இதனை முன்னிட்டு நவ.10, 11 தேதிகளில் கடலூர் மாவட்டத்தில் கனமழை பெய்யும் என அறிவித்துள்ளது.

மேலும் கீழணையிலிருந்து சுமார் 15 ஆயிரம் கனஅடி நீர் கொள்ளிடம் ஆற்றின் மூலம் கடலுக்கு வெளியேற்றப்படுகிறது. இதனால் கடலூர் மாவட்டத்தில் உள்ள கொள்ளிடக் கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது . இந்நிலையில் கடலூர் மாவட்ட கண்காணிப்பாளர் சக்திகணேசன் உத்தரவின் பேரில் சிதம்பரம் காவல் கோட்டத்தில் தேசிய பேரிடர் மீட்புப் படையினர் தயார் நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர். இதுகுறித்து டிஎஸ்பி சு. ரமேஷ்ராஜ் தெரிவித்தது: புயல், வெள்ளத்திலிருந்து மக்களை மீட்பதற்காகவும், மரங்கள் சாலையில் விழுந்து போக்குவரத்து தடை ஏற்பட்டால், மரங்களை அப்புறப்படுத்துவதற்கும் சிதம்பரம் காவல் கோட்டத்தில் தேசிய பேரிடர் மீட்புப் படையினர் ஒரு ஆய்வாளர், இரு உதவி ஆய்வாளர்கள் மற்றும் 80 பேர் மீட்புப் படையினர் 6 குழுக்களாக பிரிக்கப்பட்டு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர் . கடலூர் மாவட்டத்தில் இதுவரை நீர்நிலைகளில் சிக்கி 10 க்கும் மேற்பட்டோர் இறந்துள்ளனர். எனவே பொதுமக்கள் யாரும் இரவு நேரங்களில் வெளியே வர வேண்டாம். மேலும் யாரும் நீர் நிலைகளில் இறங்கக்கூடாது. மீன்பிடிக்கக்கூடாது என எச்சரிக்கப்பட்டுள்ளது. மேலும் வனத்துறையினர் முதலைகள் நடமாட்டத்தை கண்காணித்து வருகின்றனர். கனமழையின் போது மக்கள் அத்தியாவசியமின்றி யாரும் வெளியே வர வேண்டாம் என டிஎஸ்பி சு. ரமேஷ்ராஜ் தெரிவித்தார். அப்போது ஆய்வாளர்கள் ஆறுமுகம், குணபாலன், உதவி ஆய்வாளர் ஆனந்தகுமார் ஆகியோர் உடனிருந்தனர்.

### கடலூர்: 300 ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டிருந்த பயிர்கள்

# தண்ணீரில் மூழ்கின....



தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தொடங்கி பெய்து வருகிறது. கடலூர் மாவட்டத்திலும் கடந்த சில நாட்களாக கன மழை பெய்து வருகிறது. இந்த மழையால் தாழ்வான இடங்களில் மழைநீர் தேங்கி உள்ளது . குடியிருப்பு பகுதி களை சுற்றிலும் மழைநீர் சூழ்ந்துள்ளது. தொடர் மழையால் குளம், குட்டைகள், ஆறு , ஏரிகள் நிரம்பி வருகின்றன. மேலும் நேற்று முதல் சென்னையில் பெய்த மழையால் சென்னையின் பெரும்பாலன முக்கிய பகுதிகளில் வெள்ள நீர் சூழ்ந்து உள்ளது. இந்நிலையில் தற்பொழுது விழுப்புரம் , கடலூர் மற்றும் புதுச்சேரியில் அடுத்த 6 மணி நேரத்தில் கனமழைக்கு வாய்ப்பு உள்ளது எனவும் மேலும், கனமழை காரணமாக திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்பட வாய்ப்புள்ளதாக பேரிடர் மேலாண்மை ஆணையம் எச்சரிக்கை விடுத்து உள்ளது. இதேபோல் கடலூர் மாவட்டத்திலும் தீபாவளிக்கு பிறகு முதல் தொடர்ந்து மழை பெய்து வருகிறது, இதனால் மாவட்டத்தில் உள்ள 20 க்கும் மேற்பட்ட ஏரிகள் நிரம்பிவிட்டன மீதம் உள்ள ஏரிகளும் தொடர்ந்து நிரம்பி வருகின்றது, மேலும் கடலூர் மாவட்டத்தில் நேற்று இரவு முதல் தற்பொழுது வரை பெய்து வரும் தொடர் மழையால் கடலூரில் பல்வேறு பகுதிகளிலும் மழை நீர் தேங்கியதால் மக்கள் பெரும் அவதிக்கு உள்ளாகி வருகின்றனர். கடலூர் பேருந்து நிலையம் நுழைவு வாயில், மேலும் பல குடியிருப்பு பகுதிகளில் மழை நீர் சூழ்ந்துள்ளதால் பொதுமக்கள் பெரும் அவதிக்கு உள்ளாகி வருகின்றனர். குறிப்பாக கடலூர் மாவட்டம் செம்மண்டலம் பகுதியில் உள்ள னிறூலு நகர், ஆனந்த் நகர் ஆகிய பகுதிகளில் மழை நீர் சூழ்ந்து தனி தீவு போல் காட்சியளிக்கின்றன. தங்கள் பகுதிகளில் கடந்த பல வருடங்களாக மழை காலங்களில் இவ்வாறு மழை நீர் தேங்கி நின்று பெரும் அவதிக்கு உள்ளாகி வருவது வழக்கம் இது குறித்து மாவட்ட நிர்வாகத்திடம் முறையிட்டால் தங்களுக்கு தற்காலிகமாக நீர் வெளியேற்றப்படும் ஆனால் மீண்டும் அடுத்த மழைக்கு தண்ணீர் தேங்கி விடும், மேலும் தற்பொழுது தான் வடகிழக்கு பருவமழை தொடங்கி உள்ள நிலையில் இனி வரும் காலங்களில் மேலும் மழை அதிகமாக தான் பெய்யும் என்பதால் தங்களுக்கு நிரந்தர தீர்வாக வடிகால் வசதி செய்து தர வேண்டும் என கோரிக்கை வைத்து உள்ளனர்.

### கடலூர்:அத்தியாவசிய பொருட்களை தயாராக வைத்திருக்க வேண்டும்

# அதிகாரிகளுக்கு கலெக்டர் பாலசுப்பிரமணியம் உத்தரவு



சிதம்பரம் பொதுப்பணித்துறை அலுவலகத்தில வருவாய்த்துறை , பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறை ஆகிய துறை அலுவலர்களுடன் கனமழை தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து கலெக்டர் பாலசுப்பிரமணியம் ஆய்வு மேற்கொண்டார். பின்னர் கலெக்டர் கூறுகையில், பொதுப்பணித்துறையினர் நீர் நிலைகளை தொடர்ந்து கண்காணித்து நீர்வரத்து மற்றும் நீர் வளர்ச்சி துறையினர் தங்கள் பகுதிகளை தொடர்ந்து கண்காணித்து மழை வெள்ளத்தினால் பாதிப்பு ஏற்படாத வகையில் தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். மேலும் வெள்ளம் பாதிக்கக்கூடிய பகுதிகளுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்கள் மற்றும் பேரிடர் மீட்பு உபகரணங்களை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் என அனைத்துத்துறை அலுவலர்களுக்கும் அறிவுறுத்தினார். அதனை தொடர்ந்து குறிஞ்சிப்பாடி அடுத்த குண்டியமல்லூர் பகுதியில் பெருமாள் ஏரியில் இருந்து மழைநீர் வெளியேறுவதையும், மேலும் பெருமாள் ஏரியில் இருந்து கீழ்பூவானிக்குப்பம் மதகு மூலம் நீர் வெளியேற்றப்படுவதையும் கலெக்டர் பாலசுப்பிரமணியம் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது சிதம்பரம் கோட்டாட்சியர் ரவி, பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் பாலமுருகன் மற்றும் உதவிபொறியாளர்கள், நெடுஞ்சாலைத்துறை உதவிபொறியாளர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உள்பட பலர் உடனிருந்தனர்.

நேரங்களில் வெளியே வர வேண்டாம். மேலும் யாரும் நீர் நிலைகளில் இறங்கக்கூடாது. மீன்பிடிக்கக்கூடாது என எச்சரிக்கப்பட்டுள்ளது. மேலும் வனத்துறையினர் முதலைகள் நடமாட்டத்தை கண்காணித்து வருகின்றனர். கனமழையின் போது மக்கள் அத்தியாவசியமின்றி யாரும் வெளியே வர வேண்டாம் என டிஎஸ்பி சு. ரமேஷ்ராஜ் தெரிவித்தார். அப்போது ஆய்வாளர்கள் ஆறுமுகம், குணபாலன், உதவி ஆய்வாளர் ஆனந்தகுமார் ஆகியோர் உடனிருந்தனர்.

### சேத்தியாத்தோப்பு அருகே தொடர் மழையால்

# சாலையில் உடைப்பு



கடலூர் மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக தொடர் ந்து பரவலாக மழை பெய்து வருகிறது. இதில் பல்வேறு இடங்களில் அமைக்கப்பட்டிருந்த தரைப்பாலங்கள் மழை வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டுள்ளன. மேலும் சில இடங்களில் சாலைகளில் உடைப்பு ஏற்பட்டுள்ளது, இதனால் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டு வருகிறது.அந்த வகையில் சென்னை, கும்பகோணம் சாலையில் சேத்தியாத்தோப்பு மின் நகர் அருகே நேற்று சாலையில் திடீரென உடைப்பு ஏற்பட்டு, உள்வாங்கியுள்ளது, அந்த சமயத்தில் அவ்வழியாக வாகனங்கள் ஏதும் செல்லாததால் பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது. இதையடுத்து அந்த பகுதியில் விபத்து ஏதும் ஏற்படாத வகையில் சாலையில் உடைப்பு ஏற்பட்ட பகுதியில் போலீசார் தடுப்புகள் அமைத்து பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.




விளம்பர தொடர்புக்கு
9597887847
8870884969